DINAKARAN-30-MAY-2016

ஈஷாவில் சர்வதேச யோகா தினம் முன்னிட்டு சிறப்பு ஹட யோகா பயிற்சி

கோவை, மே30: உலக யோகா தினமான ஜூன் 21ம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாளில் யோகா தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அன்றைய தினம் பிரதமர் மோடி யோகா பயிற்சி மேற்கொள்ளவுள்ளார். யோகா கலையை சமூகத்தின் பல தளங்களில் கொண்டு செல்லும் முறையில் கடந்த 25 ஆண்டுகளாக ஈஷா யோகா மையம் செயல்பட்டு வருகிறது. விவசாயி, கார்ப்பரேட் அதிகாரிகள் மட்டுமின்றி ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ராஜஸ்தான் முதல்வர் என பலர் ஈஷா சத்குருவால் வடிவமைக்கப்பட்ட யோக கலையை பயின்று பயனடைந்து வருகின்றனர்.

அனைவருக்கும் யோகா சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும், பிறருக்கு கற்று கொடுக்கும் வகையிலும் ஒரு வகுப்பு மற்றும் ஆசிரிய பயிற்சி உள்ளடங்கிய ஹட யோகா பயிற்சி கடந்த 26ம் தேதி ஈஷாவில் துவங்கப்பட்டது. ஈஷா ஆதி யோகி ஆலயம் வளாகத்தில் துவங்கப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் 2 ஆயிரம் பேர் மாணவர்களாக கற்றுக்கொள்ள பதிவு செய்து பயிற்சியை மேற்கொள்ள துவங்கினர். இதில், 400 பேர் வெளி நாட்டினர். இம்மாணவர்களுக்கு தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, சீனா, ரஷ்யா, பிரெஞ்ச் மொழிகளில் நொடிக்கு நொடி குறிப்புகள் மொழி மாற்றம் செய்யப்படுகின்றன. இதில், பங்கேற்பவர்கள் ஆண், பெண், சிறுவர் என வயது 15லிருந்து 75 வரை உட்பட்டதாகும். மத்திய அரசு மற்றும் ஈஷா யோகா மையத்தின் சத்குருவின் விழிப்புணர்வு முயற்சியால் யோகா உலக மொழியாக மாறி வருகிறது.